கலை இலக்கியத் திங்களிதழ்

# கணையாழி

மலர் : 57 இதழ் : 10 ஜனவரி 2023 விலை ரூ.25/-



பூமியின்
நம்பிக்கைக்குப்
பொங்கல் வைத்துக்
கொண்டாடுவோம்!!
- ம.ரா.

# உள்ளடக்கம்


**கட்டுரை**

| | |
|---|---|
| மு.இராமசாமி | 13 |
| வாசுதேவன் அருணாசலம் | 39 |
| அ. நாகராசன் | 48 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ் | 59 |

**பரிசு பெற்ற குறுநாவல்**

| | |
|---|---|
| நெய்வேலி பாரதிக்குமார் | 24 |

**சிறுகதை**

| | |
|---|---|
| சந்தோஷ் ராகுல் | 06 |
| ஹமீது தம்பி | 42 |
| மணிமாலா மதியழகன் | 51 |

**கவிதை**

| | |
|---|---|
| ப.அ.ஈ.ஈ.அய்யனார் | 12 |
| சதீஷ் குமரன் | 23 |
| கி.சரஸ்வதி | 38 |
| விவெ | 41 |
| ஹிந்தியில் : பகவத் ராவத் | |
| தமிழில் : வசந்த தீபன் | 58 |

**கடைசிப் பக்கம்**

| | |
|---|---|
| இந்திரா பார்த்தசாரதி | 69 |



கட்டுரை
வாசுதேவன் அருணாசலம்

# அவதார் : நீரின் போக்கு – யாருக்கு வெற்றி?

*"Life's aim"* என்ற வார்த்தைகளிலுள்ள எழுத்துக்களைச் சற்று இடமாற்றி, ஒரேயொரு வார்த்தையை உருவாக்கினால், அது "*families*" என்று வரும் (பீட்டர் மெட்ஜெஸ்). இதுதான் ஜேம்ஸ் கேமரூன் தயாரிப்பில், இயக்கத்தில் உருவாகி, தற்போது வெளிவந்துள்ள "அவதார் : நீரின் போக்கு" (*Avatar : The Way of Water*) என்ற 192 நிமிட அறிபுனைவுத் திரைப்படத்தின் கரு. இது 2009 – ஆம் ஆண்டு வெளிவந்த மனிதன்-இயற்கை மோதலை மையமாகக்கொண்ட "அவதார்" திரைப்படத்தின் இரண்டாம் பாகம். இருபதடி உயர மனித உருவத்தை ஒத்த "நாவ்வி" இனத்தில் மனிதனாக இருந்து நாவ்வியாக மாறி நாவ்வி இனத்தை அழிவிலிருந்து காத்தவன்தான் இந்தத் திரைப்படத்தின் கதாநாயகன். தன்னுடைய இனத்தைவிட குடும்பத்தை அதிகமாக நேசிக்கிறான். தன்னால் நாவ்வி இனத்திற்கு, தீங்கு எதுவும் வந்துவிடக்கூடாது என்று யோசிக்கிறான். ஒமைட்டிக்காயா வாழ்விடத்தை விட்டு வெளியேறி பேன்டோரா உலகின் கிழக்கு திசையில் மிகத் தொலைவிலுள்ள மெட்காயினா வாழ்விடத்திற்கு புலம்பெயருகிறான். ஒமைட்டிக்காயா ஒரு குறிஞ்சி நிலம் (மலைசார்ந்த இடம்). தன்னுடைய நாவ்வி இனத்திற்கு உகந்த வாழ்விடம் அதுதான். மெட்காயினா ஒரு நெய்தல் நிலம் (கடல்சார்ந்த இடம்). நாவ்வி இனம் அங்கே வாழ்வதென்பது மிகக் கடினம். நெய்தல் நிலத்தில் வாழ்வதற்காக உடலமைப்பு தங்களிடம் இல்லையென்றாலும், தங்களை மாற்றிக்கொண்டு வாழ கதாநாயகனின் குடும்பம் முயலுகிறது. அதில் வெற்றியும் காணுகிறது. தந்தையின் கடமை, தாயின் பொறுமை, குழந்தைகளின் பாதுகாப்பைப் பற்றிய பெற்றோர்களின் பயம், அதனால் விதிக்கப்படும் கட்டளைகள், பெற்றோர்களின் கட்டளைகளை மீறும் குழந்தைகளின் செயல்-யதார்த்தம், குழந்தைகளின் ஏக்கம், புதிய வாழும் முறைகளைக் கற்றுக்கொள்வதில் ஏற்படும் சிரமங்கள், நட்பு, மெல்லிய இளங்காதல் எனப் பல கோணங்களில் கதை சொல்லப்பட்டிருக்கிறது.

கதாநாயகன் தன் குடும்பத்தோடு (தத்து எடுத்தக்கொண்ட ஒரு பெண் குழந்தையையும் சேர்த்து) ஒமைட்டிக்காயாவைவிட்டு மெட்காயினாவிற்கு புலம்பெயருகிறான். தன்னைத் தாக்குபவர்களைக்கூடத் திருப்பித் தாக்கத்தெரியாத, தாக்க விரும்பாத,



அமைதியை விரும்பும் மிகப்பெரிய (லீவியேத்தன்) உடலமைப்பு கொண்ட துல்கன் என்ற ஒருவகை கடல் உயிரினத்தின் ஆன்மாவோடு நட்புறவாடுபவர்கள் மெட்காயினா மக்கள். ஆனால், "பயக்கன்" என்ற ஒரு துல்கன் மட்டும் தனித்துவிடப்படுகிறான். காரணம் அவன் மற்றவர்களைத் தாக்குகிறான் என்பதால். பயக்கன் கதாநாயகனின் மகன் லோஆக்கை ஒரு ஆபத்திலிருந்து காப்பாற்றுகிறது. பயக்கனின் உடலில் தைத்து, துண்டித்துவிடுபட்ட ஓர் இரும்பாலான தூண்டியிலிருந்து லோஆக் விடுவிக்கிறான். இருவருக்குமிடையே ஆத்மபந்தம் ஏற்பட்டுகிறது. "உலகம் பிறந்தது எனக்காக" என்ற மனிதமைய (anthropocentric) எண்ணத்தோடு, மனிதர்கள் துல்கன்களின் மூளையிலுள்ள ஒருவித திரவம் மனிதர்களுக்கு நீண்ட ஆயுளைத்தரும் மருத்துவ குணம் இருப்பதைக் கண்டறிந்து, துல்கன்களை வேட்டையாடி அந்தத் திரவத்தை எடுக்கிறார்கள். இந்த மனித வேட்டைக்காரர்களிடம் பயக்கன் சிக்குகிறான். அவனை லோஆக்கும் அவனது அண்ணனும், தங்கைகளும், மெட்காயினா-நண்பர்களும், காப்பாற்றுகிறார்கள். இந்த முயற்சியில் நாவ்வி இனமாக, செயற்கையாக உருவெடுத்திருக்கும் எதிராளி க்வாரிட்ச் சிடம் சிலர் அகப்பட்டுக்கொள்கிறார்கள். இவர்கள் எவ்வாறு மீட்கப்படுகிறார்கள்? லோஆக்கிற்கும் பயக்கனுக்கும் ஏற்பட்ட ஆத்மபந்தம் கதாநாயகனின் எதிராளிகளை எப்படி அழிக்க உதவுகிறது? கதாநாயகனின் குடும்பத்தை அவனுடைய எதிராளிகளிடமிருந்து எப்படிக் காக்கிறது? கதாநாயகன் தத்து எடுத்த பெண்குழந்தை இயற்கை அன்னை ஏவாளோடு எவ்வாறு நெருங்கிய பந்தத்தை ஏற்படுத்தி அதன்மூலம் தன் வளர்ப்பு தாயையும் தன் தங்கையையும் மீட்கிறாள்? செயற்கை நாவ்வியாக வலம்வரும் க்வாரிட்ச்சியின் மனித உருவிலிருக்கும் மகன் "ஸ்பைடர்" இயற்கையை மதிக்காத, உயிரினங்களை இரக்கமின்றி அழிக்கும், தன் தந்தையை வெறுத்து நாவ்வி இன கதாநாயகன் குடும்பத்தோடு எவ்வாறு சேருகிறான்? இந்தக் கேள்விகளுக்குப் பதில்கள்தான் அவதார் இரண்டாம் பாகத்தின் கதை – "நீரின் போக்கு" (the Way of Water).

முப்பரிமாணங்களில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்தத் திரைப்படம் பிரமிப்புகளில் பிரமிப்பு (the wonder of the wonders). கண்களுக்கு

விருந்தாய் எண்ணற்ற காட்சிகளை இந்தத் திரைப்படம் தன்னகத்தே கொண்டுள்ளது. இது திரைப்படம்தானா அல்லது நீர்மூழ்கிக் கப்பலில் அழைத்துச்சென்று கடலுக்கு உள்ளிருக்கும் இயற்கை அழகின் வகைகளைக் காட்சிப்படுத்த, செய்யப்பட்ட ஏற்பாடா என்ற வியப்பு ஏற்படாமல் யாரும் திரையரங்கைவிட்டு வெளியேற முடியாது. இந்த வகையில் இந்தத் திரைப்படத்தை நோக்கினால், கதை வெறும் காரணம்தான். கட்டாயம் இரண்டு கண்கள் போதாது என்ற எண்ணத்தை உண்டுபண்ண பல காட்சிகள் உள்ளன. சுருக்கமாக, அசாதாரணமான, வியப்பூட்டும் வேடிக்கை இந்தத் திரைப்படம். கொடுத்த கட்டணத்திற்குப் பலமடங்கு மேலான சந்தோஷத்தை இந்தத் திரைப்படம் தருகிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. தன் ஆத்மநண்பன் லோஆக் சிறைப்பட்டுக்கொண்டதை அறிந்து, பயக்கன் கடலின் அடித்தளத்திற்கு விரைந்து நீந்திச் சென்று கடல் தரையில் தன் உடலை அழுத்தி, கடலுக்கு மேல் பல அடிகள் பீறிட்டு எழுந்து எதிராளிகளின் கப்பலில் விழுந்து கப்பலை நொறுக்கும் காட்சியில் திரையரங்கில் ஏற்படும் ரசிகர்களின் கரகோஷமும், குதூகலமும், ஆரவாரமும், மனிதர்களின் மனதில் தங்களை மறந்து இயற்கை உயிர்களின்பால் உள்ள ஈரத்தின், ஆத்மபந்தத்தின் சான்றிதழ். திரையில் மனிதரல்லா இனங்கள் வெற்றிபெறுகின்றனர். திரைக்கு வெளியே மனிதர்கள் தங்களை அறியாமல் வெற்றிபெறுகிறார்கள். இயற்கை வாழும் என்ற நம்பிக்கையை நம்மனம் எழுப்புகிறது. கேமரூனுக்கும் அவரது குழுவிற்கும் பாராட்டுகளையும் சேர்த்து.

vasuaruntamil@gmail.com ■